## அமிருத ரஞ்ஜனி

1: ##
தம் பரமென்றிரங்கித்* தளரா மனம் தந்தருளால் *
உம்பர் தொழும் திருமால்* உகந்தேற்கும் உபாயமொன்ருல் *
நம் பிறவித்துயர் மாற்றிய* ஞானப் பெருந்தகவோர் *
சம்பிரதாயமொன்றி* சதிர்க்கும் நிலை சார்ந்தனமே. (2)

2:
கடலமுதத்தைக் கடைந்து சேர்த்த *
திருமாலடிகாட்டிய * நம்
தேசிகர் தம்* நிலைபற்றிச் சேர்ந்தோமே.

3:
முத்திக் கருள்சூட* மூன்றைத் தெளிமுன்னம் *
இத்திக் காலேற்கும் இதம்.

4:
மூன்றிலொரு மூன்றும்* மூவிரண்டும் முந்நான்கும் *
தோன்றத் தொலையுந்துயர்.

5:
உயிரும் உடலும்* உடலாகவோங்கித் *
தயிர் வெண்ணை* தாரணியோடுண்டான் * பயிரில் –
களைபோல்* அசுரரைக் காய்ந்தான் * தன்கையில் –
வளை போல்* எம் ஆசிரியர் வாக்கு.

6:
அலையற்ற ஆரமுதக் கடல்* அக்கடலுண்ட முகில் *
விலையற்ற நன்மணிவெற்பு* வெயில் நிலவோங்கு பகல் *
துலையுற்றனவென்பர்* தூமறை சூடும் துழாய் முடியார்க்கு *
இலையொத்தன அவன்பாதம்* பணிந்தவர்க்கு எண்ணுதற்கே.

7:
உத்தி திகழும்* உரை மூன்றின் மும்மூன்றும் *
சித்தம் உணரத் தெளிவித்தார் * முத்திதரும் –
மூலமறையின்* முடிசேர் முகில்வண்ணன் *
சீலமறிவார் சிலர்.

8:
எனக்குரியன் எனது பரம் என்பேறு என்னுது *
இவையனைத்தும் இறையில்லா இறைக் கடைத்தோம் *
தனக்கிணை ஒன்றில்லாத திருமால் பாதம் *
சாதனமும் பயனுமெனச் சலங்கள் தீர்ந்தோம் *
உனக்கு இதமென்று ஒரு பாகனுரைத்தது உற்ரேம் *
உத்தமனும் அவனுதவி எல்லாங் கண்டோம் *
இனிக் கவரும் அவை கவர இகந்தோம் சோகம் *
இமையவரோடு என்று இனிநாம் இருக்கு நாளே.

9:
தத்துவங்கள் எல்லாம்* தகவால் அறிவித்து *
முத்தி வழிதந்தார் மொய்கழலே * அத்திவத்தில் –
ஆரமுதம் ஆரும்* இருநிலத்தில் என்றுரைத்தார் *
தார முதல் ஓதுவித்தார் தாம்.

10:
திருநாரணனெனும் தெய்வமும்* சித்தும் அசித்துமென்று *
பெரு நான்மறை முடிபேசிய* தத்துவம் மூன்றிவை கேட்டு *
ஒரு நாளுணர்ந்தவர்* உய்யும் வகையன்றி ஒன்றுகவார் *
இரு நாலெழுத்தின்* இதயங்களோதிய எண் குணரே.

11:
காரணமாய் உயிராகி அனைத்தும் காக்கும் *
கருணை முகில் கமலையுடன் இலங்கு மாறும் *
நாரணனார் வடிவான உயிர்கள் எல்லாம் *
நாமென்று நல்லடிமைக்கு ஏற்குமாரும் *
தாரணி நீர் முதலான மாயை காலம் *
தனிவான் என்றிவை உருவாம் தன்மை தானும் *
கூரணி சீர் மதியுடைய குருக்கள் காட்ட *
குறிப்புடன் நாம் கண்ட வகை கூறினோமே.

12:
அப்படி நின்ற* அமலன் படியெல்லம் *
இப்படி எம்முள்ளத் தெழுதினார் * எப்படியும் –
ஏரார் சுருதி ஒளியால்* இருள் நீக்கும் *
தாரா பதி அனையார் தாம்.

13:
செம்பொற் கழலிணை* செய்யாள் அமரும் திருவரங்கர் *
அன்பர்க்கு அடியவராய்* அடிசூடிய நாமுரைத்தோம் *
இன்பத் தொகையென எண்ணிய* மூன்றில் எழுத்தடைவே *
ஐம்பத்தொரு பொருள்* ஆருயிர் காக்கும் அமுதெனவே.

14:
யான் அறியும் சுடராகி நின்றேன்* மற்றும் யாதுமலேன் *
வானமரும் திருமால் அடியேன்* மற்றோர் பற்றுமிலேன் *
தான் அமுதாமவன் தன்* சரணே சரணென்றடைந்தேன் *
மானமிலா அடிமைப்* பணி பூண்ட மனத்தினனே.

15:
சீலங் கவர்ந்திடும்* தேசிகர் தேசின் பெருமையினால் *
தூலங்களன்ன* துரிதங்கள் மாய்ந்தன துஞ்சல்தரும் *
கோலங் கழிந்திடக்* கூறிய காலம் குறித்து நின்றோம் *
மேலிங்கு நாம் பிறவோம்* வேலை வண்ணனை மேவுதுமே.

16:
வண்மையுகந்த அருளால்* வரம் தரும் மாதவனுர் *
உண்மை உணர்ந்தவர்* ஓதுவிக்கின்ற உரைவழியே *
திண்மை தருந்தெளிவொன்ருல்* திணியிருள் நீங்கியநாம் *
தண்மை கழிந்தனம்* தத்துவம் காணும் தரத்தினமே.

17:
நாராயணன் பரன்* நாம் அவனுக்கு நிலையடியோம் *
சோராதனைத்தும்* அவன் உடம்பென்னும் சுருதிகளால் *
சீரார் பெருந்தகைத்* தேசிகர் எம்மைத் திருத்துதலால் *
தீரா மயலகற்றும்* திறம்பாத் தெளிவுற்றனமே.

18:
ஒன்றே புகலென்று* உணர்ந்தவர் காட்டத் திருவருளால் *
அன்றே அடைக்கலங் கொண்ட* நம் அத்திகிரித் திருமால் *
என்றே இசையின் இணையடி சேர்ப்பர்* இனிப்பிறவோம் *
நன்றே வருவதெல்லாம்* நமக்குப் பரமொன்றிலதே.

19:
சிறுபயனில் படியாத தகவோர் எம்மைச் –
சேர்க்க * அடைக்கலங் கொண்ட திருமால் தானே *
மறு பிறவி அறுத்து அழியா வானில் வைக்கும் *
மனமே நீ மகிழாதே இருப்பதென்கொல் *
உறுவது உனக்குரைக்கேன் இங்கிருக்குங் காலம் *
ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி வேண்டி *
பெருவதெலாம் இங்கே நாம் பெற்றுவாழ *
பேரடிமையால் ஏதென்று இகழேல் நீயே.

20:
சாக்கியர் சைனர்கள்* சார்வாகர் சாங்கியர் சைவர் மற்றும் *
தாக்கியர் நூல்கள் சிதையத்* தனிமறையின் கருத்தை *
வாக்கியம் முப்பதினுல்* வகைசெய்து வியாகரித்தோம் *
தேக்கி மனத்துள் இதனைத்* திணியிருள் நீங்குமினே.

21:
தள்ளத் துணியினும்* தாய் போல் இரங்கும் தனித்தகவால் *
உள்ளத்துறைகின்ற* உத்தமன் தன்மை உணர்ந்துரைத்தோம் *
முள் ஒத்த வாதியர்* முன்னே வரினெங்கள் முக்கியர் பால் *
வெள்ளத்திடையில் நரிபோல்* விழிக்கின்ற வீணர்களே.

22:
செய்யேல் மறமென்று* தேசிகன் தாதை அவனுரைத்த *
மெய்யே அரும் பொருள் சூடிய* வெண்மதி காதலியாம் *
பொய்யே பகைப்புலன்* ஐயிரண்டொன்று பொருங்கருவி *
கையேறு சக்கரக் காவலன்* காவலடைந்தவர்க்கே.

23:
அந்தமிலாதிதேவன் அழி செய்தடைத்த *
அலைவேலையோத மடையச் *
செந்தமிழ் நூல் வகுத்த சிறுமாமனிச்சர் *
சிறுகைச் சிருங்கையது போல் *
சந்தமெலாம் உரைப்ப இவையென்று * தங்கள் –
இதயத் தடக்கி * அடியோம்
பந்தமெலாமறுக்க அருள் தந்துகந்து *
பரவும் பொருள்கள் இவையே.

24:
முக்குணமாயையின்* மூவெட்டின் கீழ்வரு மூவகையும் *
இக்குணமின்றி இலங்கிய* காலச் சுழியினமும் *
நற்குணமொன்றுடை நாகமும்* நாராயணனுடம்பாய்ச் *
சிற்குண மற்றவையென்று உரைத்தார்* எங்கள் தேசிகரே.

25:
எனதென்பதும்* யானென்பதுமின்றித் *
தனதென்று தன்னையுங் காணாது * உனதென்று –
மாதவத்தால் மாதவற்கே* வன்பரமாய் மாய்ப்பதனில் *
கைதவத்தான் கைவளரான் காண்.

26:
பல்வினை வன்கயிற்றால்* பந்த முற்று உழல்கின்றனரும் *
நல்வினை முட்டிய* நாரணனார் பதம் பெற்றவரும் *
தொல்வினை என்றுமில்லாச்* சோதி வானவரும் சுருதி *
செல் வினையோர்ந்தவர்* சீவரென்றோதச் சிறந்தனமே.

27:
ஆரணங்களெல்லாம்* அடிசூடமேல் நின்ற *
காரணமாய் ஒன்றால் கலங்காதான் * நாரணனே –
நம்மேல் வினைகடியும்* நல்வழியில் தான்நின்று *
தன்மேனி தந்தருளும் தான்.

28:
குடல்மிசையொன்றியும்* கூடியும் நின்ற கொடுந் துயரும் *
உடல்மிசைத் தோன்றுமுயிரும்* உயிர்க்குயிராம் இறையும் *
கடல்மிசைக் கண்ட* தரளத்திரள் அவைகோத்த பொன்னூல் *
மடல்மிசை வார்த்தை* அதன் பொருளென்ன வகுத்தனமே.

29:
தத்துவந்தன்னில்* விரித்திடத் தோன்றும் இரண்டுதனில் *
பத்தி விலக்கிய* பாசண்டர் வீசுறும் பாசமுறார் *
எத்திசையும் தொழுதேத்திய* கீர்த்தியர் எண்டிசையார் *
சுத்தர் உரைத்த* சுளகம் அருந்திய தூயவரே

30:
வினைத்திரள் மாற்றிய* வேதியர் தந்த நல்வாசகத்தால் *
அனைத்தும் அறிந்தபின்* ஆரும் பயனுமென அடைந்தோம் *
மனத்திலிருந்து* மருத்தமுதாகிய மாதவனார் *
நினைத்தல் மறத்தல் அரிதாய* நன்னிழல் நீள் கழலே.

31:
ஓதுமறை நான்கதனில்* ஓங்குமொரு மூன்றினுள்ளே *
நீதி நெறிவழுவா நிற்கின்றோம் * போதமரும் –
பேராயிரமும்* திருவும் பிரியாத *
நாராயணன் அருளால் நாம்.

32:
ஊன் தந்து நிலை நின்ற உயிரும் தந்து *
ஓர் உயிராகி உள்ளொளியோடு உறைந்த நாதன் *
தான் தந்த இன்னுயிரை எனதென்னாமல் *
நல்லறிவும் தந்தகலா நலமும் தந்து *
தான் தந்த நல்வழியால் தாழ்ந்த வென்னைத் *
தன்தனுக்கே பரமாகத் தானே யெண்ணி *
வான்தந்து மலரடியுந் தந்து * வானோர் –
வாழ்ச்சிதர மன்னருளால் வரித்திட்டானே.

33:
திருமாலடையிணையே* திண்சரணாகக் கொண்டு *
திருமாலடியிணையே சேர்வார் * ஒருமால் –
அருளால் அருளாத* வானோர்கள் வாழ்ச்சி *
அருளால் நமக்களித்தார் ஆய்ந்து.

34:
சேர்க்கும் திருமகள் சேர்த்தியில்* மன்னுதல் சீர்ப் பெரியோர்க்கு *
ஏற்குங் குணங்கள்* இலக்காம் வடிவில் இணையடிகள் *
பார்க்கும் சரணதில்* பற்றுதல் நம் நிலைநாம் பெறும் பேறு *
ஏற்கின்ற எல்லைகள் எல்லாம்* களையற எண்ணினமே.

35:
திருமாலடியிணை சேர்ந்து* திகழ்ந்த அடிமைபெறத் *
திருநாரணன் சரண்* திண் சரணாகத் துணிந்தடைவோர் *
ஒருநாலுறைக்க* உயிர்தரு மந்திரம் ஓதியநாம் *
வருநாள் பழுதற்று வாழும்* வகையதில் மன்னுவமே.

36:
மற்றொரு பற்றின்றி* வந்தடைந்தார்க்கெல்லாம் *
குற்ற மறியாத கோவலனார் * முற்றும் –
வினை விடுத்து* விண்ணவரோடொன்ற விரைகின்றார் *
நினைவுடைத்தாய் நீ மனமே நில்லு.

37:
எல்லாத் தருமமும்* என்னை இகழ்ந்திடத் தான் இகழாது *
எல்லாந் தனதென* எல்லாமுகந்தருள் தந்த பிரான் *
மல்லார் மதக்களிறொத்த* வினைத் திரள் மாய்ப்பனென்ற –
சொல்லால் * இனியொருகால்* சோகியாத் துணிவுற்றனமே.

38:##
வினைத்திரள் மாற்றிய* வேதியர் தந்தருள் வாசகத்தால் *
அனைத்தும் அறிந்த பின்* ஆறும் பயனுமென அடைந்தோம் *
மனத்திலிருந்து* மருத்தமுதாகிய மாதவனார் *
நினைத்தல் மனத்தில் அரிதாகி* நின்றன நீள்கழலே.

39: ##
எட்டில் ஆறிரண்டிலொன்றில்* எங்கும் ஆறு இயம்புவார் *
விட்டஆறு பற்றும் ஆறு* வீடு கண்டு மேவுவார் *
சிட்டாரான தேசுயர்ந்த* தேசிகர்க்குயர்ந்து மேல் *
எட்டு மூன்றும் ஊடறுத்தது* எந்தைமால் இரக்கமே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: